எனது இல: என்சபி/சிஓ/எஸ்/21
2004.03.26.

சுற்றுநிருப இல : 06/2004

தலைவர்,
........................ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

### நெல் கொள்வனவுக்கான ஊக்குவிப்பணம் (தரகு)

2002/2003 கால போக நெல் கொள்வனவில் ஈடுபட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.1.40 வீதம் ஊக்குவிப்பணம் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் நெல் கொள்வனவிற்காக ஊக்குவிப்பணம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்டதும், வழங்கப்படவுள்ளதுமான ஊக்குவிப்பணத்தை கூட்டுறவுச் சங்கம் பல்வேறு வகையில் பங்கிட்டு செலவு செய்வதற்கு முனைவதாக அறியமுடிந்துள்ளது.

இப்பணமானது கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரியதேயன்றி நெல் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்குரிய தனிப்பட்ட கொடுப்பனவு அல்ல என்பதனை நினைவிற்கொள்ளுதல் வேண்டும்.

எனவே இப்பணம் தொடர்பில் பின்வரும் வகையில் செயல்படும்படி அறிவுறுத்துகின்றேன்.

1. கிடைக்கப்பெறும் ஊக்குவிப்பணம் முற்றாக தனியானதொரு வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

2. நெல் கொள்வனவு நடவடிக்கைகளில் நேரிடையாக தொடர்புபட்ட கொடுப்பனவுகள் தொடர்பான பிரேரணைகள் இருப்பின் அதற்கான திட்டத்தினை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றதன் பின் இப்பணத்திலிருந்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம். இத்திட்டமானது மாவட்டத்திற்கான பொதுதிட்டமாக அமைதல் வேண்டும்.

3. எஞ்சியபணம் சங்கத்தினதும் அங்கத்தவர்களினதும் பொதுநலனுக்கான திட்டத்திற்காக பயன்படுத்தப்படல் பொருத்தப்பாடானதாகும்.

வவுனியா தெற்கு ப.நோ.கூ.சங்கம் தான் பெற்ற ஊக்குவிப்பணத்தை முற்றாகப் பயன்படுத்தி அரிசி ஆலை ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறான செயல் திட்டங்களில் முன் கூறப்பட்ட ஊக்குவிப்பணத்தைப் பயன்படுத்துவது நீண்டகால பயன் தருவதாக அமையும்.

எக்காரணம் கொண்டும் இவ் ஊக்குவிப்பணம் தனி மனித நலனுக்காக பயன்படுத்தப்படலாகாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

இ.இளங்கோவன்,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்(வடி).